செய்தி வெளியீட்டு எண்.87 நாள்.10.02.2017

**திருவள்ளூர் மணவாளநகர் கே.இ.நடேச செட்டியார் அரசு மேல்நிலைப்பள்ளியில் தேசிய குடற்புழுக்களை நீக்க நாளை முன்னிட்டு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கும் சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சத்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

~~~~~

திருவள்ளூர் மணவாளநகர் கே.இ.நடேச செட்டியார் அரசு மேல்நிலைப்பள்ளியில் தேசிய குடற்புழுக்களை நீக்க நாளை முன்னிட்டு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கும் சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சத்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் கூறியதாவது “குடற்புழுத்தோற்றினால் ஏற்படும் பாதிப்புகளான ஊட்டச்சத்து குறைபாடு, சோர்வு, சுகவீனம், பசியின்மை, இரத்த சோகை, குமட்டல், வயிற்று வலி, வயிற்றுப்போக்கு முதலிய பாதிப்புகளிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்ற நாடு தழுவிய குடற்புழு நீக்க நாள் சிறப்பு முகாம் பிப்ரவரி 10 மற்றும் 15 தேதி ஆகிய தினங்களில் அனைத்து அரசு, அரசு உதவி பெறும், தனியார் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் நடைபெறுகின்றது.

குடற்புழு நீக்கத்திற்காக அல்பெண்டசோல் மாத்திரைகள் அங்கன்வாடி மையத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத 1 முதல் 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும், பள்ளிகளில் படிக்கும் (1 முதல் 12-ஆம் வகுப்பு வரை) குழந்தைகளுக்கும் வழங்கப்படும். 1 முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அல்பெண்டசோல் ½ மாத்திரை (200mg), 2 முதல் 19 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கு அல்பெண்டசோல் 1 மாத்திரை (400mg)

திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் 8,62,391 குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரையான அல்பெண்டசோல் மாத்திரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் 1,572 பள்ளிகளிலும், 569 தனியார் பள்ளிகளிலும் 1,860 அங்கன்வாடி மையங்களிலும் மொத்தம் 4,001 மையங்களில் 2196 ஆசிரியர்கள் 1860 அங்கன்வாடி பணியாளர்கள் 532 சுகாதாரப் பணியாளர் மூலமாகவும் மொத்தமாக 4588 பணியாளர்கள் மூலமாக வழங்கப்படுகிறது. தேசிய குடற்புழு நீக்க நாளில் மாத்திரை பெற முடியாத குழந்தைகளுக்கு 15.02.2017 அன்று அனைத்து அரசு, அரசு உதவி பெறும், தனியார் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் வழங்கப்பட உள்ளது. குடற்புழு நீக்க மாத்திரை (அல்பெண்டசோல் மாத்திரைகள்) உட்கொண்டு குடற்புழு தொற்றினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து குழந்தைகள் பாதுகாக்க வேண்டும் ” என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.ஜே. பிரபாகரன், பயிற்சி மருத்துவர் மரு.தீபலட்சுமி, மருத்துவர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~